**கவனிக்க.-** *28.02.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1853 - 2014 මාර්තු මස 7 වැනි සිකුරාදා - 2014.03.07

*1853 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 262 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 266 |


**கவனிக்க .-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் *2014* ஆம் ஆண்டிற்கான நுவரெலியா நீதாசன வலயத்தின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2014, மாச்சு மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மாச்சு மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - பொலன்னறுவை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, சித்திரை மாதம் 07 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாசி 07.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பொலன்னறுவை | தமன்கடுவை | தமன்கடுவ பலாத்த கதுறுவெல பகுதியில் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், பொலன்னறுவை. |
| பொலன்னறுவை | தமன்கடுவை | தமன்கடுவ பலாத்த அல்ஹிலால்புர பகுதியில் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், பொலன்னறுவை. |

3-129

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, சித்திரை மாதம் 16 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாசி 20.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி | துறைநீலாவணை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு |

3-199

---

**கல்வி அமைச்சு**

பட்டதாரி பயிலுனர் தேரர்கள் மற்றும் ஏனைய சமய தலைவர்களை இலங்கை ஆசிரிய சேவையின் 3 -1 தரத்திற்கு சேர்த்துக் கொள்ளல் - 2014

பட்டதாரி பயிலுனர் தேரர்கள் மற்றும் ஏனைய சமய தலைவர்களை அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக 2013.09.05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய "வரவுசெலவு திட்ட யோசனையை வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை திட்டமிடல்" வேலைத்திட்டத்திற்குரியதாக தற்போது பட்டதாரி பயிலுனர் யோசனை திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் அல்லது வேலைத்திட்டத்தில் பயிற்சி பெற்றதன் பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்றுள்ள பட்டதாரி பிக்குகள்/பிக்குனிகள் மற்றும் ஏனைய சமய தலைவர்களின் இலங்கை ஆசிரிய சேவையில் இணைய விரும்புபவர்களை அரச பாடசாலைகளில் காணப்படும் சமய ஆசிரிய வெற்றிடங்களுக்காகப் பாடசாலையை அடிப்படையாக கொண்டு ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ள விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்:**

1.1 பதவிக்குரிய தகைமைகள் :

(i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தாய்மொழி கணிதம் உட்பட (3) திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகள் ஆறு பாடங்கள் (06) இல் சித்தியடைந்த அல்லது பரீட்சை ஆணையாளரினால் இதற்கு சமமானதாக கருதப்படும் ஏனைய தகைமைகளை பெற்றிருத்தல். முதல் சந்தர்ப்பத்தில் குறைந்த பட்சம் ஐந்து கட்டாய பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

கட்டாயப் பாடம் எனப்படுவது (i) சமயம், (ii) தாய்மொழி, (iii) ஆங்கிலம், (iv) கணிதம், (v) அழகியற் கல்வி (சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம் மற்றும் நடனக் கலை (சிங்களம், தமிழ், ஆங்கிலம், அரபு), (vi) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல், (vii) சமூகக் கல்வி மற்றும் வரலாறு, (viii) தொழில்நுட்ப பாடம் (விவசாயம்/ வர்த்தகம் மற்றும் கணக்கியல்/ கைத்தறி கைத்தொழில்),

மற்றும்

(ii) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

(iii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் பட்டம் பெற்றிருத்தல்.

1.2 பொதுவான தகைமைகள்:-

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்;

II. சிறந்த பழக்க வழக்கங்கள் மற்றும் தேக ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

III. விண்ணபப்பப்படிவம் கோரும் 2014.03.21 ஆந் திகதி அன்று 21 வயதை விட குறையாதவராகவும் மற்றும் 45 வயதை விட மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

IV. 2011.12.07 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 11/2260/504/179-1 வரவு செலவுத் திட்ட யோசனையை வினைத் திறனுடன் அமுல்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை திட்டமிடல் என்ற தொனிப்பொருளில் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைய பட்டதாரி பயிலுனராக சேர்த்துக்கொள்ளப்பட்ட தேரர்கள்/பிக்குணிகள்/ஏனைய சமய தலைவர்கள் அருட்சகோதரியாக இருக்க வேண்டும்.

2. **ஆட்சேர்ப்பு முறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

2.1 இவ்வறிவுறுத்தல்களுக்குரியதாக விண்ணப்பம் கோரப்பட்ட விண்ணப்பதாரர்களை சேவைக்கு சேர்த்துக்கொள்ளும் நியமனப் பொறுப்பாளரினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தி காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தகைமை கொண்டோர் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட மாட்டார்கள்.

2.2 தகைமைகளை பூரணப்படுத்தப்பட்ட பாடத்திற்குரியதாக நியமனம் பெற விரும்பும் வதியும் சமய ஸ்தலத்திற்கு அருகாமையில் உள்ள ஐந்து பாடசாலைகளை தொடராக பெயரிட்டு நேர்முகப் பரீட்சையில் தகைமைபெறும் நியமனதாரர்களுக்கு தேசிய பாடசாலைக்கு மற்றும் மாகாண பாடசாலைகளில் வெற்றிடங்கள் கொண்ட பெயர் பட்டியலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**குறிப்பு:**

அவ்வவ் பாடங்களுக்கு அமைய விண்ணப்பதாரர்களினால் பெயரிடப்பட்ட விருப்பத்தொடருக்கு அமைய முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் பாடசாலையில் காணப்படும் பாடத்துக்கு உரியதான வெற்றிட எண்ணிக்கையை விட விருப்ப தொடர்கள் காணப்படும் வேளையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறும் புள்ளி அளவிற்கு அமைய முன்னுரிமை வழங்கப்படும். ஒரு பாடசாலையை கோரியுள்ள விண்ணப்பதாரிகளில் பலர் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள வேளையில் பாடசாலைக் குரிய தூர அளவிற்கு அமைய முன்னுரிமை வழங்கப்படும். இத்தீர்மானத்திற்கு அமைய தகைமைபெறும் விண்ணப்ப தாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

2.3 மகளிர் கல்லூரிகளுக்காக பிக்குனிகள் மற்றும் அருட் சகோதரிகள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

2.4 அரச நியமனத்தினை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை ஆசிரிய சேவை பிரமாதனக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமானக் குறிப்பினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இதற்கு பின்னர் விதிக்கப்படும் சீர்திருத்தங்களுக்கு உட்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கை ஆசிரிய சேவையில் 3-1 தரத்துக் சேர்த்துக் கொள்ளப்படுவர். இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு 2007.08.24 ஆந் திகதி பொது நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 6/2006 (iv) இற்கமைய இந்நியமனத்துக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் TS-1-2006A கொண்ட சம்பள அளவு (மாதாந்தம் ரூபா 14,135 - 180 x 9 - 240 x 6 - 330 x 5 - 400 x 7 - 645 x 13 - ரூபா 30,030 ஆகும். தாங்கள் இச்சம்பள அளவில் 8 ஆம் கட்டமான ரூபா 15,395 மாதாந்த சம்பள அளவில் நிலைப்படுத்தப்படுவீர்கள்.

2.5 இந்நியமனம் நிரந்தரமானது: ஓய்வூதிய சம்பளம் கொண்டது.

2.6 பதவி உயர்வு இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் ஒழுங்குவிதிமுறைக்கு அமைய கட்டுப்பட்டிருக்கும்.

2.7 இந்நியமனம் இலங்கை ஆசிரியர் சேவையில் இடமாற்றம் ஒழுங்குவிதிகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

3. **விண்ணப்பிக்கும் முறை:**

3.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் A4 அளவு கடதாசியின் இரு

பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பரீட்சார்த்தி பூர்த்தி செய்ய வேண்டும்.

3.2 சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் 2014.03.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பட்டதாரி பயிலுனர் பிக்கு மற்றும் ஏனைய சமய தலைவரை இலங்கை ஆசிரிய சேவையின் 3 - 1 தரத்திற்கு சேர்த்துக் கொள்ளல்'' என கட்டயமாக குறிப்பிடப்பட வேண்டும்.

4. விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பப்படிவம் தொடர்பில் அமைச்சினால் பொறுப்பு கூறப்படமாட்டாது.

5. உரிய தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுகள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

7. இவ் விண்ணப்பப்படிவத்தின் இல. 6 இன் கீழ் தற்போது இணைப்பு செய்யப்பட்டுள்ள சேவை இடத்தில் மாவட்ட செயலகம்/ பிரதேச செயலகம் அல்லது தாபன பொறுப்பாளரினால் சான்றுப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது கட்டயமாகும்.

8. அவ்வறிவித்தலில் தழுவப்படாத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும், வெற்றிடங்களில் ஒரு பகுதியை அல்லது முழுமையாக நிரப்புதல் அல்லது நிரப்பாமல் இருப்பது தொடர்பாக இறுதி தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

**அட்டவணை இல. 1**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் ஒழுங்கு விதிமுறைகள்

மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை 50 ஆகும்.

கற்பிக்கும் திறமைகளுக்காக 50 புள்ளிகள் உரித்தாகும்.

(நியமனம் பெறும் விடயத்திற்கமைய நேர்முகப் பரீட்சை சபையினால் வழங்கப்படும் 5 நிமிட தொனிப் பொருளில் விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

அனுர திசாநாயக,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, மார்ச்சு 7.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]

அலுவலக பயன்பாட்டிற்காக

**கல்வி அமைச்சு**

*2011.12.07 ஆந் திகதியில் 11/2260/504/179- ''வரவு செலவுத் திட்டத்தை வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை திட்டமிடல்'' இன் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி பிக்குனி தேரர்கள் மற்றும் ஏனைய சமய தலைவர்களை இலங்கை ஆசிரிய சேவையின் 3 -1 தரத்திற்கு சேர்த்துக்கொள்ளல்*

நியமனம் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் சமய பாடம் : [ ]

1.1 முதல் எழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----. (உ+ம் : - PERERA A.B)

1.1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :-----.

1.2 முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

1.2.1 முதல் எழுத்துக்களினால் குறிப்பிடும் பெயர் (தமிழில்) :---.

2. தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

2.1 தற்போதைய முகவரி (தமிழில்) :-----.

2.2 நிரந்தரமாக வதியும் மாவட்டம் :-----.
மாகாணம் :-----.

3. ஆண்/பெண் (ஆண் - 0, பெண் - 1) (உரிய இலக்கத்தினை அடைப்பினுள் எழுதவும்) :- [ ]

3.1 பிறந்த திகதி :
ஆண்டு: [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.2 2014.03.21 ஆந் தினத்தன்று வயது :
வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

3.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-
[ | | | | | | | | | ]

3.5 தற்போது சேவை செய்யும் அலுவலகம் :-----.

3.6 அலுவலக முகவரி :-----.

3.7 பயிற்சிக்கு நியமனம் பெற்ற திகதி :-----.

3.8 பதவி :-----.

3.9 நிரந்தர நியமன் பெற்ற திகதி :-----.

3.10 தொலைபேசி இல. : கை. தொ.பே. இல. :-----.
அலுவலகம் :-----. சமய ஸ்தலம் :-----.

3.11 மின் - அஞ்சல் முகவரி :-----.

4. கல்வி தகைமை தொடர்பான விபரங்கள் :-

4.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை :
வருடம் :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

4.2 க.பொ.த. (உ.த.) பரீட்சை :
வருடம் :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. உயர்கல்வி தகைமை :-
5.1 பெற்றுள்ள பட்டம் :-----.
5.2 பல்கலைக்கழகம் :-----.
5.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி :-----.
5.4 பட்டத்திற்குரிய தொடர்ந்துள்ள பிரதான பாடம்/ பாடங்கள் :-

| |
|---|
| |
| |
| |
| |

5.5 பட்டம் பெற்றுள்ள மொழி :-----.
5.6 ஏனைய உயர்கல்வி தகைமை :-----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக் கைக்கும் எட்டிய வகையில் உண்மையானதென தெரிவிக்கின்றேன். நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தகைமையற்றவர் என தெரிய வரும் பட்சத்தில் சேவையில் இருந்து நீக்குவதற்கும் கட்டுப்படுகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பின்னர் மாற்றியமைக்கமாட்டேன்.

திகதி :-----. ....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**6. விண்ணப்பதாரியின் திணைக்கள தலைவரின் சான்றிதழ்:**

.................... தேரர் /பிக்குனி/சமய தலைவர்கள்/அருட் சகோதரி/ மௌலவியின் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கிறேன். இவ்வமைச்சின்/திணைக்களத்தில்/நிரந்தர/தற்காலிக/சமயாசமயம் ஊழியராக சேவையாற்றுவதாகவும் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என அறிவிக்கிறேன்.

அத்துடன் இவ் அலுவலகத்தில் சேவையாற்றிய காலத்தில் சிறந்த ஒழுக்க நெறிகளை பின்பற்றி வினைத்திறனுடன் சேவையாற்றியதாக சான்றுப்படுத்துகிறேன்.

..................
திணைக்கள பொறுப்பாளர் அல்லது
அதிகாரம் கொண்ட உத்தியோகத்தர்.

பதவி :-----.
அமைச்சு/திணைக்களம் :-----.
திகதி :-----.

3-226

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு**

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் அளவீட்டு அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள் பதவிகளுக்கும் ஆய்வுகூட உதவியாளர்கள் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014**

அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த III ஆம் தர அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள் பதவிகளுக்கும் ஆய்வுகூட உதவியாளர் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப் பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2014.04.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள் பதவி/ஆய்வுகூட உதவியாளர் பதவி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**1. சேவை நிபந்தனைகள்:**

(i) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையது மாகும். விதவைகள் மற்றும் அநாதைகள்/விதுரர்கள்/ அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புகள் செய்தல் வேண்டும் ;

(ii) இப்பதவி மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் காலத் தைக் கொண்டிருக்கும் ;

(iii) அரச கரும மொழிக் கொள்கைகளுக்கு அமைய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன்படி குறித்த காலப்பகுதிக்குள் அரசகரும மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

**2. சம்பளங்களும் படிகளும்:**

பயிற்சித் தரம் :
1 ஆம் வருடம் - ரூபா 12,920 மாதாந்தப் படி
2 ஆம் வருடம் - ரூபா 13,040 மாதாந்தப் படி

**பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம்:**
அளவீட்டுச் சேவை சாதனங்களின் பரிசோதகர்கள்/ஆய்வுகூட உதவியாளர்

MN 3 - 2006 A

ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885

பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 வருடங் களுக்குள் முதலாவது தடைகாண் பரீட்சையும், II ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 03 வருடங்களுக்குள் இரண்டாவது தடைகாண் பரீட்சையும், I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 05 வருடங்களுக்குள் மூன்றாவது தடைகாண் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.

**3. கல்வித் தகைமைகள்:**

(i) அளவீட்டுச் சேவை சாதனங்களின் பரிசோதகர் பதவி

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல்,

இரசாயனவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுள் பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம் அல்லது உயர்கணிதம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

பழைய பாடத்திட்டத்திற்கு அமைய பௌதீகவியல், பிரயோக கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று உட்பட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமோர் பாடத்திற்கு திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) ஆய்வுகூட உதவியாளர் பதவி

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுள் பௌதீகவியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

பழைய பாடத்திட்டத்திற்கு அமைய க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் பௌதீகவியல் உட்பட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமோர் பாடத்திற்கு திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில 06 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

**4. ஏனைய தகைமைகள் .-**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்ப முடிவுத்திகதியில் 18 – 30 இற்கும் இடையிலான வயதினைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆகக் கூடிய வயதெல்லையானது பொருந்தாது).

(iii) சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும், ஆரோக்கியமான வராகவும் இருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-** மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இரண்டு வருடங்கள் கோட்பாடுகள் பற்றியும் செயன்முறைகள் பற்றியும் குறிப்பிட்ட பயிற்சிப் பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர், திணைக்களத் தலைவரினால் வழங்கப்படும் தேர்ச்சி சான்றிததழைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாயின், ஆட்சேர்ப்பு வகுப்பான III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும். அவ்வாறு ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் மொத்த தேர்ச்சிப் புள்ளிகளின் ஒழுங்கிற்கு அமைய ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்க்கும் அளவைவிட இருமடங்கு பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் பட்டியல் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கு அளவீட்டு அலகுகள், நியமங்கள் , சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமைகளைப் பூர்த்தி செய்த, இரண்டு பாட விடயங்களுக்கும் மொத்தமாக உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் பயிற்சி வகுப்பில் அனுமதிக்கப்படுவார். பரீட்சையில் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் அவர்களுடைய பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தனித்தனியாக அறிவிக்கப்படும். பரீட்சையை நடத்துவதும், பெறுபேறுகளை வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். அவருடைய முடிவு இறுதி முடிவாகும்.

6. இப்பரீட்சை பின்வரும் நகரங்களில் நடத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் வசிக்கும் முகவரிகளுக்கு அண்மித்த நகரத்தை தமது பரீட்சை நிலையமாகத் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் நகரமும், நகர இலக்கமும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒருமுறை விண்ணப்பித்த நகரம் எக்காரணம் கொண்டும் பின்னர் மாற்றுவதற்கு இமளிக்கப்பட மாட்டாது.-

| நகரம் | நகர இல. | நகரம் | நகர இல. |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | வவுனியா | 13 |
| கம்பஹா | 02 | திருகோணமலை | 14 |
| களுத்துறை | 03 | மட்டக்களப்பு | 15 |
| மாத்தளை | 04 | அம்பாறை | 16 |
| கண்டி | 05 | புத்தளம் | 17 |
| நுவரெலியா | 06 | குருநாகல் | 18 |
| காலி | 07 | அனுராதபுரம் | 19 |
| மாத்தறை | 08 | பொலன்னறுவை | 20 |
| ஹம்பாந்தோட்டை | 09 | பதுளை | 21 |
| யாழ்ப்பாணம் | 10 | மொனராகலை | 22 |
| மன்னார் | 11 | கேகாலை | 23 |
| முல்லைத்தீவு | 12 | இரத்தினபுரி | 24 |
| | | கிளிநொச்சி | 25 |

07. **எழுத்துப் பரீட்சை :**

* பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். எச் சந்தர்ப்பத்திலும் விண்ணப்பிக்கும் பரீட்சையின் மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் தான் விண்ணப்பித்த மொழியிலேயே விடையளிக்க வேண்டும்.

* பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் -

+ நுண்ணறிவுப் பரீட்சை.- (நேரம் : 1 மணித்தியாலம்) மொத்தப் புள்ளிகள் - 100.
இப்பரீட்சை வினாத் தாளானது பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான ஆற்றலை மதிப்பீடு செய்யும் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு ஆற்றல், தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்குப் பல்தேர்வு வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை அளிக்கக் கூடிய வகையில் 50 வினாக்கள் கொண்டதாக இருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

+ தொழில்நுட்ப ரீதியான வினாப்பத்திரம்.-
(நேரம்: 2 மணித்தியாலங்கள்)
மொத்தப் புள்ளிகள் - 100
பௌதீகத் தர அளவீடு மற்றும் பிரயோக பௌதீகவியல் ஆகியவற்றைப் பற்றிய அறிவை பரிசீலனை செய்வதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். க.பொ.த. (உயர்தர) மட்டத்திலான அறிவு போதுமானது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

8. **விண்ணப்பப்படிவங்களும், விண்ணப்பிக்க வேண்டிய முறையும்.**- விண்ணப்பப் படிவங்களின் தலைப்பு இலக்கம் 01 முதல் 08 வரை முதலாம் பக்கத்திலும், 09 முதல் 11.2 வரை இரண்டாம் பக்கத்திலும், 11.3 முதல் 17 வரை மூன்றாம் பக்கத்திலும், எஞ்சியவை நாலாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட தகவல்களை உங்கள் கையெழுத்து மூலம் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு பொருந்தாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள், எதுவித முன்னறிவித்தலுமின்றி புறக்கணிக்கப்படும். குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை தம் வசம் வைத்திருப்பது விண்ணப்பதாரிக்கு பிரயோனசமுள்ளதாக அமையும். அதேசமயம் விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

9. அரச சேவையில்/ மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத்தாபன சேவையில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவங்கள் அவரவர் பணிபுரியும் நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைத்த பின்னர் உடனடியாக அதை அறிவிக்கும் முகமாக பத்திரிகை விளம்பரம் ஒன்று வெளியிடப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சாத்திகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சான்றுப்படுத்திய போட்டோப் பிரதி மற்றும் பரீட்சை பற்றுச்சீட்டு, பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு மற்றும் பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியே இருப்பாராயின் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் ஆகியவற்றையும் அனுப்பி வைப்பது பயனுள்ளதாகும்.

பரீட்சார்த்திகள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்கு முன்னர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் சந்தர்ப்பத்திலேயே பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்ட பிரசேப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

11. ஒரு பதவிக்கான பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். இரண்டு பதவிகளுக்காகவும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1,300 செலுத்த வேண்டும். இப்பணத்தொகை இலங்கை வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையின் இலக்கம் 0000407320 என்ற கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு வரவு வைத்தமையை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட கூட்டில் கழறாத வகையில் நன்றாக ஒட்ட வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமோ அல்லது அதன் ஒரு பகுதியோ எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பம் மற்றும் பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு ஆகியவற்றின் போட்டோ பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

12. இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடத்தும் பரீட்சைகளின் போது, பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் பரீட்சார்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் வெளியிட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதி அட்டையை வழங்கிய ஒரே காரணத்தினால் மேற்படி பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முழுமையான தகைமைகளையும் பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது. பரீட்சைகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பிறப்பிக்கும் சகல சட்ட திட்டங்களுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். மேற்படி சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்கள் ஆவார்.

13. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாகத் தீர்மானிக்கும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு மாத்திரமே உண்டு. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட இவ் அறிவித்தலில் ஏதாவது முன்பின் முரணாக இருப்பின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலே வலுவாக்கம் பெறும்.

பணிப்பாளர் நாயகம்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள்
மற்றும் சேவைகள் திணைக்களம்,
இல. 101, பூங்கா வீதி (பார்க் ரோட்),
கொழும்பு 05.
2014.03.07.

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள் பதவிகளுக்கும் ஆய்வுகூட உதவியாளர்கள் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014**

Open Competitive Examination for the Recruitment to the Posts of Inspectors of Measurement Services Devices and Lab Assistant in the Department of Measurement Units, Standards and Services - 2014

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக).

விண்ணப்பிக்கும் பதவி

அளவீட்டுச் சேவை சாதனங்களின் பரிசோதகர் பதவிக்கான இலக்கம் 01, ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கான இலக்கம் 02, இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் இலக்கம் 03 ஐக் குறிப்பிடுக. (பரீட்சை பற்றிய அறிவித்தலின் 08 ஆம் பந்திக்கு அமைய).

பரீட்சையில் தோற்ற விரும்பும் நகரமும், நகர இலக்கமும்:

நகரம் நகர இலக்கம்

(பரீட்சை அறிவித்தலின் 6 ஆம் பந்திக்கு அமைய)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (பெரிய ஆங்கில எழுத்துக்களில்): (உ-ம் - NIMAL, A.B.). :-----.

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (பெரிய ஆங்கில எழுத்துக்களில்) :-----.

3. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

4. நிரந்தர முகவரி :- (பெரிய ஆங்கில எழுத்துக்களில்) (பரீட்சை பிரவேசப் பத்திரம் இம்முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்) :-----.

5. (பால்) : (ஆண் - 0, பெண் - 1)
(குறிப்பிட்ட இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

6. திருமணமானவரா/திருமணமாகாதவரா
(திருமணமானவர் 1, திருமணமாகாதவர் 2)
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

7. தேசிய இனம் :- (சிங்களம் -1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் -3, முஸ்லீம் -4, ஏனையோர் - 5)
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

9. (அ) பிறந்த திகதி :-
ஆண்டு : மாதம் : திகதி :

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியின்போது வயது :
வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:

10. நீங்கள் பிறப்பின் மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரஜையா எனக்குறிப்பிடுக. (பதிவின் மூலமாயின் விபரங் களைத் தருக.)

11. கல்விசார்/தொழில்சார் தகைமைகள் :
11.1 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சை :

பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :-----.
பரீட்சை இலக்கம் :-----.

| பாடம் | பெறுபேறுகள் | பாடம் | பெறுபேறுகள் |
|---|---|---|---|
| 1. | | 7. | |
| 2. | | 8. | |
| 3. | | 9. | |
| 4. | | 10. | |
| 5. | | 11 | |
| 6. | | 12. | |

11.2 க.பொ.த. (உயர் தரப்) பரீட்சை :

பரீட்சை சித்தியடைந்த ஆண்டு :-----.
பரீட்சை இலக்கம் :-----.

| பாடம் | பெறுபேறுகள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

11.3 நீங்கள் சித்தியடைந்துள்ள அதி உயர் பரீட்சை :

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

11.4 ஏனைய கல்விசார்/தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை | நிறுவனம் | திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் மற்றும் முன்னர் பதவி வகித்திருந்தால் அதுபற்றிய விபரங்கள்.-

| பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

13. நீங்கள் ஓர் அரச பதவியை வகித்து அதில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டீர்களா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடுக.) :-----.

14. உங்களுக்கு எதிராக (ஏற்கனவே அரச சேவையில் ஈடுபட்டிருப்பின்) திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? :-----.

15. ஏதாவது குற்றச்சாட்டின் பேரில் நீங்கள் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது உங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதா? :-----.

16. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெறக் கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் :-

1. ...................... 2. .......................
..................... .......................
..................... .......................

17. ஏனைய வேறு தகவல்கள் :-----.

18. பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கி :-----.
பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
திகதி :-----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு கழறாத வகையில் இங்கு ஒட்டவும். |

19. **பரீட்சார்த்தியின் உறுதியுரை** :

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானதெனவும், சரியானதெனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ................ மற்றும் ................ ஆந் திகதியிடப்பட்ட பற்றுச்சீட்டு இத்துடன் ஒட்டப்பட்டுள்ளதென உறுதிமொழிகிறேன். மேலும் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்படவும், இப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் தகைமை யற்றவன் எனக் கருதப்பட்டால் பரீட்சைக்கு முன்பாக அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அல்லது பரீட்சையின் பின்னர் எனது விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன். மேலும் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் ஏதாவது தகவல் அல்லது விபரம் பொய்யானதெனக் கண்டறியப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதே சமயம் பரீட்சை நடத்துவது பற்றி பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் ஒழுங்குவிதிகளுக்கும், பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கு இணங்குவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

.....................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

20. **விண்ணப்பதாரி அரச சேவையில் பணிபுரிபவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :-**

மேற்படி 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையெனவும் பின்வருமாறு அவை திருத்தப்பட வேண்டுமெனவும், விண்ணப்பதாரியின் பணிகளும் நடத்தையும் ................... எனவும் நான் சான்றுப்படுத்துகிறேன். தற்போது விண்ணப்பதாரி வகிக்கும் பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது.

...............................
தலைவரின் கையொப்பம்,
திணைக்களம்/ நிறுவனம்.

பதவி :-----.
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்)
திகதி :-----.

3-238

---

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு 3, தரம் III இலுள்ள அலுவலர்களிற்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை - 2013

பொது, நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல் என்பவற்றின் கீழ் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3, தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க வினைத்திறன்காண் தடைப் பரீட்சை ஒன்று இலங்கை நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், 2014, மே மாதம் 3 ஆந் திகதி கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. 2009.12.09 ஆந் திகதிய 1631/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை 5 இன் 7.2 ஆம் பிரிவில் இப்பரீட்சைக்குரிய பரீட்சார்திகளின் விபரங்கள் விதித்துரைக்கப்படுகின்றன.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு முன்னர் நடத்தப்பட்டிருந்த பதவியுடன் தொடர்புபட்ட தாபனவிதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவற்றின் பாடங்களுடனான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளை அலுவலர்கள் சித்தியெய்தியிருந்தால் இப்பரீட்சைக்கு தோற்றுவது தேவைப்படுத்தப்படவில்லை.

3. இப்பரீட்சை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்டங்களை மீறுமிடத்து ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டிய நிலை உருவாகும்.

4. விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும். அதற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பதாரர்கள் தமது

திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2014, மார்ச்சு மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு, ''பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம், 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 7'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளரிற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. **விண்ணப்பப்படிவங்கள்.**-01 முதல் 04 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும் எஞ்சிய பகுதிகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் "ஏ4" அளவிலான தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சு மூலம் தயாரித்துக் கொள்ள முடியுமாயினும் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படவேண்டியதோடு, விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதிகள் அனுப்பப்படக்கூடாது என்பது அறியத்தரப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.

**பரீட்சைக் கட்டணம்.**- முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் அதன் பின்னர் தோற்றும் அலுவலர்கள் ஒரே முறையில் சகல பாடங்களுக்கும் தோற்றுவதாயின் ரூபா 500 ஐ பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றுவுதாயின் ரூபா 300 ஐ பரீட்சைக் கட்டணமாகவும் செலுத்த வேண்டியதோடு பணத்தை இலங்கை வங்கியின் சுதந்திர சதுக்கக் கிளையில் அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேணப்படும் கணக்கிலக்கம் 02323278 இற்கு வைப்புச் செய்துபெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் கட்டாயமானதாகும். (போட்டோப் பிரதியினை தம்வசம் வைத்துக் கொள்ளவும்). எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6. பரீட்சைக்கு விண்ணப்பித்த அலுவலர்கள் அனைவருக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையின் பிரதியொன்றுடன் பரீட்சை அனுமதி அட்டையும் அனுப்பப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ளதாக கருதுதல் கூடாது. பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2014, ஏப்பிறல் 25 ஆந் திகதி அல்லதுஅதற்கு பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி ஒன்றினையும், வங்கிப் பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதி ஒன்றினையும் விண்ணப்பப் படிவத்தினை பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டினையும், கொழும்பிற்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்குரிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் குறிப்பிடப்பட்ட தங்களது கோரிக்கைக் கடிதம் ஒன்றினையும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அனுப்பி அனுமதி அட்டையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளினால் மேற்கொள் ளப்படும் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

7. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளரி னால் அனுப்பப்படும் அனுமதி அட்டையைப் பெற்றுக் கொண்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். போக்குவரத்துப்படி வழங்கப்படமாட்டாது.

**பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) ஆட்பதிவுத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட முடியும்.

8. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இப்பரீட்சை நடாத்தப்படுவதோடு உரிய சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் அலுவலர்களுக்கு இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப்பரீட்சையொன்றின் மூலமன்றி சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கும் தாம் கல்வி கற்ற மொழி மூலம் அல்லது அரச கருமமொழியொன்றின் மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பித்த மொழிமூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9. தாம் விரும்புவதாயின் ஒவ்வொரு பாடத்திற்காக வெவ்வேறாகவும் மற்றும் ஒவ்வொன்றிற்குமாக வெவ்வேறு தடவைகளிலும் அலுவலர்கள் தோற்றலாம். எவ்வாறெனினும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்காகவும் உரிய மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

10. பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சையில்

சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் பெயர்களை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. **பரீட்சை நடைமுறை.**- பரீட்சார்த்திகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப்பரீட்சையொன்றிற்குத் தோற்றுதல் வேண்டும் :

| பாடங்கள் | பாட எண் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. தாபன விதிக்கோவை | 01 | 01 மணித்தியாலம் | 100 |
| 2. நிதிப்பிரமாணக் குறிப்பு | 02 | 01 மணித்தியாலம் | 100 |

11.1 தாபன விதிக்கோவை (பாட எண் - 01)

நடைமுறைச் செயலாற்று விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பாக அரச அலுவலர் ஒருவரின் அடிப்படை அறிவினை பரீட்சித்தல் இங்கு எதிர்பார்க்கப்படும்.

பகுதி - I: சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களை உள்ளடக்கியிருக்கும் வினாப்பத்திரத்திலேயே விடையளித்தல் வேண்டும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி - II : அமைப்புக் கட்டுரை வினாப்பத்திரமாகும். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

11.2 நிதிப் பிரமாணக்குறிப்பு (பாட எண் - 02)
அரச அலுவலகங்களில் பிரயோகிக்கப்படும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அடிப்படை அறிவினையும் நிதிக் கட்டுப்பாட்டு ஏடுகளின் தொழிற்பாடுகள் பற்றிய புரிந்துணர்வையும் களஞ்சியப்படுத்தல் பற்றிய அறிவினையும் பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி - I: சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்கள் உள்ளடக்கியிருக்கும் வினாப்பத்திரத்திலேயே விடையளித்தல் வேண்டும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி - II : அமைப்புக் கட்டுரை வினாப்பத்திரமாகும். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

12. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் ஒன்று தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக இருக்கும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாகம்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2014, பெப்புருவரி 20.

☐
(அலுவலகப் பயன்பாட்டுக்கு மாத்திரம்)

இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3, தரம் III இலுள்ள அலுவலர்களிற்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை - 2013

Efficency bar examination for officers in Class 3 Grade III of Sri Lanka Information and Communication Technology Service - 2013

1. 1.1 தேசிய அடையாள அ. இலக்கம் :

1.2 விண்ணப்பதாரரின் இறுதியில் வரும்பெயர்கள் :- (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.3 விண்ணப்பதாரரின் பெயரின் முதலெழுத்துக்கள் :- (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.4 முழுப் பெயர் :- (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.5 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. 2.1 அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
பெயர் :-----.
இலக்கம்/வீதி :-----.
தபால் நகரம் :-----.

2.2 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
பெயர் :-----.
இலக்கம்/வீதி :-----.
தபால் நகரம் :-----.

2.3 மின்னஞ்சல் :-----.

3. 3.1 பால் :- (ஆண்/பெண்)
(ஆண் - 0/பெண் - 1)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி :-
ஆண்டு: மாதம் : திகதி :

4. தற்போது வகிக்கும் பதவி
4.1 பதவி :-----.
4.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :-----.

5. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

(சிங்களம் 2/தமிழ் 3/ஆங்கிலம் 4) (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக. இது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

6. நீங்கள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் பாடம்/பாடங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 11.0 ஆம் பந்தியைப் பார்க்க).

| தொடரிலக்கம் | பாடம் | பாட எண் |
|---|---|---|
| 1.<br>2. | | |

7. 7.1 நீங்கள் முதற் தடவையாகவா பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்கள் ? :-----.

7.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவையில்லையெனின் செலுத்திய பரீட்சைக் கட்டணம் தொடர்பாக கீழ்வரும் தகவல்களைக் குறிப்பிடவும்.

செலுத்தப்பட்ட பணத்தொகை:-----.
செலுத்திய திகதி :-----.
இலங்கை வங்கிக் கிளை :-----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை இவ்விடத்தில் கட்டணமாக ஒட்டுதல் வேண்டும். |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை**

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துள்ளது என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன் என்பதனையும் உறுதிமொழிகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு நான்கட்டுப்படுவதாகவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

............................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:**

இங்கு விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ............................ என்பவர் இப்பரீட்சைக்கு இலக்கம் 5.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார்.

பரீட்சார்த்தியின் கையொப்பத்தினை சான்றுபகர்கின்றேன்.

................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்

உத்தியோகபூர்வ முத்திரை.
திகதி :-----.

3-194

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், ''பொரல்லை'' என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 07.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.02.2014 |
| | | வெள்ளி | 14.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.02.2014 |
| | | வெள்ளி | 21.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.03.2014 |
| | | வெள்ளி | 28.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.03.2014 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 04.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.03.2014 |
| | | வெள்ளி | 11.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.03.2014 |
| | | வியாழன் | 17.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.04.2014 |
| | | வெள்ளி | 25.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.04.2014 |
| **மே** | .. | வெள்ளி | 02.05.2014 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.04.2014 |
| | | வெள்ளி | 09.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.04.2014 |
| | | வெள்ளி | 16.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.05.2014 |
| | | வெள்ளி | 23.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.05.2014 |
| | | வெள்ளி | 30.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.05.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.